# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2019**

## 18 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்
## பண்ணிசைப் போட்டி

**பின்வரும் தேவாரங்களில் ஒன்றினைதெரிவு செய்து பண்ணுடன் பாடுக.**

01. சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளத்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிடம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

02. தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

03. பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே